## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 201 /2020**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமலிங்கம் | சமயம் | : |
| கிராமம் | : கணக்கன்குப்பம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 41 |

தேதி 19.10.2023

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கணக்கன் குப்பம் கிராமத்தில் வருகிறேன். அ.சா.1 சத்யா எனக்கு மனைவி. ஆஜர் எதிரி பிரபு எங்கள் ஊரைச்சேர்ந்தவர்.

2. கடந்த 2019 ம் வருடத்தில் பெங்களூரில் கம்பெனிக்கு வேலைக்கு சென்றியிருந்தேன். 28.04.2019 ம் தேதி எதிரி என் வீட்டு கதவை இரவில் தட்டியுள்ளார். வெளியே என் மனைவி வந்து பார்த்தபோது எதிரி ஓடியுள்ளார். பின்னர் 03.05.2019 ம் தேதியன்று வன துர்கையம்மன் கோயிலுக்கு என் மனைவி தன் 2 பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு சென்ற போது வழி மறைத்து எதிரி தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். தரகுறைவாக பேசியுள்ளார். பாலியல் துன்புறுத்தல் செய்துள்ளார். அப்போது எனது பிள்ளைகளின் கழுத்தில் கத்தியை வைத்து எதிரி மிரட்டியுள்ளார். அப்போது என் பிள்ளைகளிடம் எதுவும் செய்யவேண்டாம் என்னிடம் பேசு என்று என் மனைவி சொல்லியுள்ளார். எதிரி ஆத்திரம் அடைந்து என் மனைவியின் 2 கைகளையும் கத்தியால் வெட்டியுள்ளார். பலத்த காயம் அடைந்த என் மனைவி மயங்கிய நிலையில் விழுந்துள்ளார். பக்கத்து நிலத்தில் சார்ந்த கதிர்வேல் என்பவர் வந்து பார்த்து என் அண்ணன் ஜெயபாலுக்கு போன் பன்னி சொல்லியுள்ளார். எனது அண்ணன் ஜெயபால் அங்கு சென்று காரில் என் மனைவியை அழைத்து கொண்டு செஞ்சி அரசு மருத்துவமணையில் சேர்த்துள்ளார். அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிக்மர் மருத்துவமணைக்கு என் மனைவி சென்றுள்ளார். எனக்கு காளிப்பன் என்பவர் போன் பன்னி சொன்னவுடன் பெங்களூரில் இருந்து கிளம்பி பாண்டி சேரி ஜிக்மர் மருத்துவமணைக்கு சென்று என் மனைவியை

பார்த்தேன். 15 நாட்கள் ஜிக்மர் மருத்துவமனையில் என் மனைவி சிசிச்சை பெற்றார். என் மனைவியிடம் ஆஜர் எதிரி பிரபு என் மனைவியிடம் தவறாக பேசி தொந்தரவு செய்துள்ளார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்குவிசாரணை**:

**2.** எனக்கும் , ஆஜர் எதிரிக்கும் இடையே நிலப்பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு திருக்கோவிலூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் C.C.271/2023 என்று சரவணன், ஜெயபால் ,பழனிசாமி ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நிலப்பிரச்சனை வழக்கு இல்லை. இந்த வழக்கிற்காக அந்த வழக்கு போட்டுள்ளார்கள்.

3. 28.04.2019 ம் தேதியன்று நான் கூறிய சம்பவத்தின்போது நான் வீட்டில்இருந்தேனா என்றால் பெங்களூரில் இருந்தேன். அவ்வாறு வீடு கதவு தட்டியதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்துள்ளோம்,. 03.05.2019 ம் தேதியன்று நான் கூறிய சம்பவத்தின்போதும் நான் பெங்களூரில் இருந்தேனா என்றால் ஆமாம். பெங்களூரில் இருந்து நேரடியாக பாண்டிச்சேரி ஜிக்மர் மருத்துவமனைக்கு சென்று பார்தேனா என்றால் ஆமாம். என்ன நடந்தது என்று என் மனைவியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பிறகு என் மனைவியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். 15. நாள் கழித்துதான் என் மனைவிடம் என்ன நடந்தது என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் 1 வாரத்தில் கேட்டு தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

5. என் மனைவியை வைத்து பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. குழந்தையை என் மனைவி இருச்சக்கர வாகனத்தில் அழைத்து சென்ற போது கீழே விழுந்ததில் என் மனைவிக்கு ஏற்பட்ட காயத்தை கொண்டு பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.